# திக்கெட்டும் உன் முரசொலி!

## (முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்தநாள் – கவிதை)

பிறக்கும் போதே
தமிழருக்கு
வெளிச்சமாக
பிறந்தவன் -நீ !

பெரியாரைஅண்ணா வை
தாங்கிய உடல் - நீ !
சாதியைச்சாய்த்த
சமத்துவ திடல்- நீ !

பெட்டியில்உறங்கிறாய்
ஆனால் உரசினால்
எரியும் தீக்குச்சி- நீ !

இனம் விழிக்க
விழித்த நிலா- நீ !
கொள்கைச் சிறக்க
உழைத்தச் சூரியன் - நீ !

மாணவர்கள்
மாறுகிறார்கள்
ஆனால் பாடம் - நீ
கல்லூரி - நீ !

எழுதும் போதும்
நிமிர்ந்தே நிற்கும்
எழுதுகோல் - நீ !

உன் போராட்டங்கள்
மெரினா
மணல் வெளி !

உன் புகழ்
நட்சத்திரம்
குவித்துவைத்த
வான் வெளி !

சட்டமன்றத்தில்
அய்யா கலைஞர் - நாதம் !
உதயநிதி ஸ்டாலின்
சங்கநாதம் !

தலைவர்
மு.க.ஸ்டாலின்
எங்கள் வீட்டில்விளக்கு !

எண்களில்
தலைவர்
மு.க.ஸ்டாலினும்
கலைஞரும்
சமமான கணக்கு !

தீயிக்குள்
கதறும் போது
ஓடி வரும் - நீ
தீயணைப்பு வண்டி !

ஆதிக்க இந்தி
எழுத்தை அழிக்கும்
நீ- தார் வண்டி !

அண்ணா நினைவிடம்
அருகே
நினைவிடம்
அமைத்தத்
தலைவா !

உன் சிரிப்பு
பூக்களுக்கே
வெக்கத்தைத் தரும் அல்லவா !

அன்பைக்கொட்டிய
தலைவா
தொண்டன் அன்பை அள்ள-
வா !

பத்திரிகையாளர்
காத்திருக்கிறார்கள்
ஒரு பேட்டி
சொல்ல-வா !

உடல் எரியும்
உன் மொழிப்போர் வரலாறு
சொல்லவா !

முடி
திருத்தகங்களில்
நாட்டின்
முடி
தீர்மானித்தவன்-நீ !

ஏழைத்தமிழர்
குடிசைக்குள்
ஓலைச்சுவடி
தமிழைப்
படிக்க வைத்தவன்- நீ !

பாய்ச்சல் புலிகள்
பணிந்து நிற்கும்
தாய்ப்புலி- நீ !

வெண் நாரை
சிறகுகளில்
உடையணிந்த
வெண் மேகம்- நீ !

கல்லக்குடியில்
வெடித்தக்குண்டுகளை
வெத்துக் குண்டுகளாக்கிய-
வீரம் - நீ !

பேசப்பேச
தோள் துண்டை
இழுத்துவிடுவது - உன் தனி
பாணி !

திரை உலகம்
அரசியல் உலகம்
அனைத்திலும்
நீ- ஞானி !

இறந்தவனும்
வாழுவான்
உன் இரங்கல் கவிதை
அப்படி !

அரசியலில்
தண்ணீர் காட்டுவாய் !
சிலருக்கு
தண்ணீக் காட்டுவாய்
எப்படி !

மை- தீக்கொட்டும்
உன் முரசொலி ! தில்லி
நடுங்கும்
உன் பறை ஒலி !

உன்னிடம்தோற்றது
ஆயுதப் போர் !
நீ நடத்தியது
காகிதப் போர் !

உன் கரிகாலன்
கேள்வி பதில்
தூண்டில் போடும் !

உன் ஆண்டியும்
போண்டியும்
சமூக அவலத்தை
தூக்கில் போடும் !

நீ விரல்களை அசைத்தால்
கொடி ஓங்கும் !
நீ விழிகளை அசைத்தால்
வீணை ஏங்கும் !

உன் கல்லறை மீது விழும்
மழை
கவிதையாகிறது !

உன் சிலையைத் தொடும்
காற்று
கவிஞனாகிறது !

கருப்புக் கண்ணாடி
மஞ்சள் சால்வை-உன்
அடையாளமாகிறது !

தமிழைத் தேரில்
அழைத்துவந்தோம்
அதைச் சாக்கரநாற்காலி
என்றார்கள் !

கர்ஜனைகள்
ஓய்வதில்லை என்றார்கள் !
அது
உன் குரல் என்றார்கள் !

நொடிக்கொரு
பேரலையைக்
கடந்தது உன் படகு !

சிறைச்சாலை
அடக்குமுறை
அனைத்தும்
உன் காலில் அடகு !

துப்பாக்கி மிரட்டினால்
முன்னேறுவாய்- நீ
நூறு மடங்கு !

குடும்பம் குடும்பமாக
மாநாட்டில் கூடுவோம் உன்
பேச்சைக் கேட்க !

குடும்பம் குடும்பமாக
சிறைச்சாலைச் செல்வோம்
உன் பேச்சைக் காக்க !

ஓநாய்கள் ஆட்டத்தை
ஒரே அறிக்கையில்
கதை முடித்தவனே !

காவேரி மருத்துவமனையில்
கடைசி மூச்சை
முடித்தவனே !

நவீன தமிழ் நாட்டின் சிற்பி- நீ
ஒவ்வொரு தமிழரோடும்
வாழ்வாய் - நீ !

**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க.
இலக்கிய அணி



மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற இரா.ஜெயராமகிருஷ்ணன் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் உடுமலை தெற்கு, மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் தொகுதி மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.ஆர்.பாபு (உடுமலை தெற்கு), க.செந்தில்குமார் (உடுமலை மத்திய), உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பாக முகவர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சேலம் மத்திய மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், ஜூன்.1–

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

தந்தை பெரியாரால் தன்மான உணர்வூட்டப்பட்டு, தமிழ் நிலத்தின் மக்களுக்கென, தமிழினத்தின் வாழ்வுக்கென, தமிழ் மொழியின் உரிமைக்கென பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட கழகத்தை அரை நூற்றாண்டு காலம் தன் தோளில் சுமந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். தனது 14வது வயதில் தமிழ் கொடியை ஏந்தி திருவாரூர் மண்ணில் தமிழ்காக்கும் போராட்டத்தில் மாணவராக தொடங்கி, தாய் தமிழ் நாட்டை 19 ஆண்டுகள் ஆட்சி செய்து, தமிழ் இனத்தின் தலைவராகவும், பல இந்திய பிரதமர்களையும், குடியரசுத் தலைவர்களையும் முன்மொழிந்து, இந்திய துணைகண்டத்தின் அரசியல் போக்கையும் இயக்கும் வித்தகராகவும் விளங்கியவர்.

பொது வாழ்க்கையில் 95வது வயது வரை ஓய்வின்றி உழைத்து நவீன தமிழகத்தை உருவாக்கி தலைசிறந்த நிர்வாகியாக திகழ்ந்தவர்.

60 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல், கலை, இலக்கியம், திரைத்துறை, பத்திரிக்கையாளர், இதழியல் துறை இப்படி பலதுறைகளில் மிளிர்ந்து பிரமிப்பூட்டும் வகையில்

தமிழ்நாட்டிற்கும், இந்திய துணைக் கண்டத்திற்கும் தனது பங்களிப்பை அளித்தவர்.

ஏழை, எளியவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மகளிர், நெசவாளர்கள், வணிகர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், மாணவிகள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், சிறுபான்மையினர் என அனைத்து தரப்பினரின் நல்வாழ்வுக்காக "கண் துஞ்சாமல் தொடர்ந்து உழைத்த தூய தலைவர் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

"ஏற்றுக் கொண்ட இலட்சியத்தை வெற்றி பெறச் செய்யும் பணியில் எனது பயணம் தொடரும், இடையூறு எதுவரினும் நில்லேன், இறுதி மூச்சுள்ள வரை உழைப்பேன் என முழங்கிச் செயலாற்றியவர். வெற்றிக்கும், தோல்விக்கும் நாமே பொறுப்பு என்கிற மன உறுதியுடன்; ஒரு பணியில் இறங்குகிற எந்த மனிதனையும் அயர்வோ, சோர்வோ அணுகாது அந்த மனிதனின் வாழ்வில் பின்னடைவும் ஏற்படாது என எத்தனையோ துன்பங்களையும், தொல்லைகளையும் தாங்கிக் கொண்டு, அடுக்கடுக்காக வந்த சோதனைகளையும், வேதனைகளையும் எதிர்கொண்டு, அவற்றையெல்லாம் தகர்த்தெரிந்து நின்று, தடம்புரளாமல் தமிழினத்திற்கு தொண்டு செய்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளில் 03.06.2026 புதன்கிழமை அன்று காலை 09.00 மணி அளவில் சேலம் மத்திய மாவட்டக் கழகத்தின் சார்பில் 4ரோடு அண்ணா பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து கொண்டாடப்படவுள்ளது.

தமிழ்! தமிழ்!!, தமிழ் இனம்! என வாழ்ந்து நம் உணர்வாய் – என்றைக்கும் நம்மை இயக்கும் முத்தமிழறிஞரின் திருவுருவ படத்தினை சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரின் வீடுகளிலும் வைத்து வணங்குவதோடு, அனைத்துப் பகுதிகளிலும் பொதுமக்கள் கூடும் இடங்களிலும், ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு இடத்தில் வைத்து வணங்கி இனிப்புகள் வழங்கியும், மருத்துவ முகாம்கள், மரக்கன்றுகள் நடுதல், மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல் மற்றும் நலத்திட்ட உதவிகள் என அனைத்து நிகழ்ச்சிகளையும் எழுச்சியோடு ஏற்பாடு செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்வதோடு, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, தகவல் தொழில்நுட்ப அணி, வர்த்தக அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, நெசவாளர் அணி, அயலக அணி, தொண்டர் அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்புசார ஓட்டுனர் அணி, விளையாட்டு மேம்பட்டு அணி, தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி ஆகிய அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் என அனைத்து நிர்வாகிகளையும், கழகத் தோழர்களையும் இந்த நிகழ்ச்சி களை எழுச்சியோடு, உணர்வுபூர்வமாக சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பல்லாவரம் வடக்கு - தெற்கு பகுதி கழக கூட்டம்: இ. ஜோசப் அண்ணாதுரை - இ.எஸ்.பொன்னார்ட் வரவேற்புரை!

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடுங்கள்!

## மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் சிறப்புரை! இ.கருணாநிதி பங்கேற்பு!

பல்லாவரம், ஜூன். 1–

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்லாவரம் வடக்கு மற்றும் பல்லாவரம் தெற்கு பகுதி கழக சார்பாக பொது உறுப்பினர்கள் கூட்டம் நேற்று 30 –5–2026 சனிக்கிழமை காலை 9 மணி அளவில் பல்லாவரம் துரைப்பாக்கம் 200 அடி சாலையில் அமைந்துள்ள விதூர் மஹால் திருமண மண்டபத்தில் பகுதி கழக அவைத்தலைவர்கள். வை.த.ரா. மூர்த்தி இரா. சேகர் ஆகியோர் தலைமையில் பகுதி கழகச் செயலாளர் மண்டலத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை வரவேற்புரை மற்றும் பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பொன்னார்ட் ஆகியோர் ஏற்பாட்டில் பகுதி கழகங்களின் நிர்வாகிகள் ச. சிவக்குமார் வ. முத்து பி. அம்பிகா எஸ். நெடுஞ்செழியன் எம்.சி ஜி. கருணாமூர்த்தி எம். இளங்கோ ஐ. கஜேந்திரன் வி. கர்ணல் ஈ. வெங்கடேசன் பி. மீனா எஸ். செந்தில்குமார் பி. ராமகிருஷ்ணன் பி. பார்த்திபன் ஆ. சூசையராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு வெற்றிகளும் தோல்விகளும் நமக்கு புதியது அல்ல ஆகவே தோல்விகளை கண்டு தோளாமல் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் நமது உயிரினும் மேலான அன்புத் தலைவர் ஓய்வுக்கு ஓய்வு கொடுத்து வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை இரண்டு பகுதிகளில் உள்ள வட்டக் கழகங்களில் காலையிலே நமது இரு வண்ணக் கொடியை ஏற்றி அன்னாரின் புகைப்படத்தை அலங்கரித்து வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி மூத்த கழக முன்னோடிகளுக்கும் நமது மகளிர் அணி தாய்மார்களுக்கும் இளைஞர் அணி தம்பிமார்களுக்கும் முடிந்தால் புத்தாடைகள் வழங்கி அவர்களை சிறப்பித்து சிறப்பாகவும் எழுச்சியுடனும் எதிரிகள் இதைப் பார்த்து தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் எவ்வளவு எழுச்சியுடன் விழா கொண்டாடுகிறார்கள் வியக்கும் வண்ணம் பிறந்தநாள் விழாவை கொண்டாடுங்கள் என சிறப்புரை ஆற்றினார்.

அதற்கு முன்பாக மாவட்ட கழக துணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி அவர்களும் தேர்தல் நேரத்தில் அல்லும் பகலும் ஆயிராமல் உழைத்த வட்ட கழகச் செயலாளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் பிறந்தநாள் விழாவை நமது மாவட்ட கழகச் செயலாளர் கூறும் வண்ணம் சிறப்பாக கொண்டாடுங்கள் என கூறி சிறப்பு உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் த. ஜெயக்குமார் பொதுக்குழு உறுப்பினர் மு. ரஞ்சன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் மாவட்ட பிரதிநிதிகள் தா. ராஜாராமன் கே. தனசேகரன் க. ரமேஷ் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் வே. தாமோதரன் ச.ரஞ்சித் , பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் சரத் வெங்கடேசன் சா. சாகுல் ஹமீது, கேசவன் வட்டக் கழக செயலாளர் தே. இளங்கோவன் பி. பரமசிவம் பி. ராஜ்குமார் டி. வி. ராஜா எம். சி. மை. அந்தோணி டி. எச். பிரான்சிஸ் பால் கோ. ரங்கநாதன் வி. என். சிலம்பரசன் எம். முருகையன் பி. வெங்கடேசன் ஆர். கே. நாகராஜ் எஸ். முஜிபுர் ரகுமான் டீ. கன்னியப்பன் காமேஷ் ரங்கநாதன் பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் வட்ட அணிகளின் நிர்வாகிகள் தேர்தல் பணிக்கு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பல்லாவரம் வடக்கு மற்றும் பல்லாவரம் தெற்கு பகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி கழகச் செயலாளர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, இ.எஸ்.பொன்னார்ட் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை சிறப்போடும் எழுச்சியோடு கொண்டாடுவது குறித்து சிறப்புரை ஆற்றினார். மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி, பம்மல் வடக்குப் பகுதி கழகச் செயலாளர் த.ஜெயக்குமார், பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன், பகுதி கழக அவைத் தலைவர்கள் வை.த.ரா. மூர்த்தி, இரா.சேகர் ஆகியோர் உடன் இருந்தனர்.